பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 04 2026 MONDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக, வரும் 29ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 142 தொகுதிகளில் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

2. மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. மஹாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

4. நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை, வழக்கத்தை விட குறைவாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா – அர்ஜென்டினா இடையேயான முதலாவது மகளிர் ஹாக்கிப் போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக வரும் 29ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 142 தொகுதிகளில் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான காலஅவகாசம் இன்று நிறைவடைந்ததை ஒட்டி, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இம்மாநிலத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளில் வரும் 23ஆம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கிடையே, இம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ், பிஜேபி, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி தலைவர்கள், மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்கள் குறித்தும், மேற்குவங்க வளர்ச்சிக்கான உறுதிமொழிகள் குறித்தும் எடுத்துரைத்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா, *Birbhum*-ல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்களை மேற்குவங்க அரசு முறையாக நிறைவேற்றவில்லை என்றும திரு. அமித் ஷா குறை கூறினார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி. மம்தா பானர்ஜி, அரசின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரித்து வருகிறார்.

பொது சிவில் சட்டத்தை மேற்குவங்கத்தில் செயல்படுத்த பிஜேபி முயற்சிப்பதாகவும் அவர் குறை கூறினார்.

ராணுவத்தில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய பிஜேபி தலைமையிலான மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் செல்வி மம்தா பானர்ஜி குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் கட்சியினரும் மேற்குவங்கத்தின் வளர்ச்சிக்காக நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டு, பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோல், இடதுசாரி கட்சித் தலைவர்களும் மேற்குவங்கத்தின் நலனுக்காக நிறைவேற்றிய திட்டங்களை எடுத்துரைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழக சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரமும் விறுவிறுப்படைந்துள்ளது.

திமுக, அஇஅதிமுக, பிஜேபி, நாம் தமிழர், மற்றும் த.வெ.க கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் இன்று அறந்தாங்கியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

திமுக, ஒரு குடும்பத்தின் நலனுக்காக மட்டுமே பணியாற்றி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் குறை கூறினார்.

போதைப்பொருள் புழக்ககத்தை கட்டுப்படுத்த திமுக தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி பணியாற்றி வருவதாகவும் திரு. நிதின் நபின் கூறினார்.

இந்த தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக திமுக அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

திமுகவின் தேர்தல் அறிக்கை பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

>>>>><<<<<

வாக்களிப்பதற்கு பயோமெட்ரிக் முறையை அறிமுகப்படுத்த தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

இருப்பினும் தற்போது நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு இதனை செயல்படுத்த முடியாது என்றும் நீதிபதிகள் தெளிவுபடுத்தினர்.

வாக்குச்சாவடிகளில் பயோமெட்ரிக் அடிப்படையில் வாக்காளர்கள் வாக்களிக்க உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கோயம்புத்தூர் மாவட்டத்துக்கு உட்பட்ட 5 தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 3 mins.)

>>>>><<<<<

மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் மருந்துப் பொருட்கள் தொடர்பான மாநாட்டில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

மருந்து உற்பத்தியில் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, மருந்து உற்பத்தித் துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>><<<<<

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தடையின்றி நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி. சுஜாதா சர்மா, OTP அடிப்படையிலான சமையல் எரிவாயு விநியோகம் முறைகேடுகளை தடுக்க உதவியதாக கூறினார்.

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விநியோகமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக திருமதி. சுஜாதா சர்மா தெரிவித்தார்.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

தானே மாவட்டத்திற்கு உட்பட்ட மேம்பாலம் ஒன்றில் சிமெண்ட் மிக்ஸர் லாரி மீது வேன் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதில் பலத்த காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>><<<<<

நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை, வழக்கத்தை விட குறைவாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு. Mrityunijay Mohapatra கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

92 சதவீதம் அளவிற்கு பருவமழை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் திரு. Mrityunijay Mohapatra தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியா - அர்ஜென்டினா இடையேயான முதலாவது மகளிர் ஹாக்கி போட்டி, Buenos Aires-ல் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

>>>>><<<<<

Hamburg ஓப்பன் ஸ்குவாஷ் போட்டி, இன்று தொடங்கியது.

>>>>>END<<<<<